நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், திருப்பத்தூர் வேலூர் மாவட்டம்

<u>சி.சி.எண். 177/2020</u>

2021ம்ஆண்டு நவம்பர் திங்கள் 24ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.1 வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது

| | | | | |
|---|---|---|---|---|
| **பெயர்** | **: கோவிந்தசாமி** | **வயது** | **:** | **42** |
| **த/பெ.** | **: குள்ள அண்ணாமலை** | **தொழில்** | **:** | **கூலி** |
| **ஊர்** | **: ஏலகிரிமலை** | **சமயம்** | **:** | |
| **வட்டம்** | **: திருப்பத்தூர்** | **சாதி** | **:** | |
| **மாவட்டம்** | **: திருப்பத்தூர்** | | | |

**முதல் விசாரணை:-**

நான் ஏலகிரிமலை பாடானூர் கிராமத்தில் வசிக்கிறேன்.கூலி வேலை செய்கிறேன். ஆஜர் எதிரி எனது பங்காளி மகன். கடந்த 10.03.2020ம்தேதி மாலையில் நான் மதுபோதையில் கீழே விழுந்துவிட்டேன். அதில் எனக்கு காயம் ஏற்பட்டது. மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். போலீசார் என்னை மருத்துவமனையில் வந்து விசாரித்தார்கள்.சந்தேகத்தின் பேரில் எதிரியின் மீது நான் புகார் அளித்துவிட்டேன். புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(சாட்சியை அரசு தரப்பில் விசாரிக்க அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கியதன் பேரில் அ.த.கு.வி:-)**

மேய்ச்சல் புறம்போக்கு நிலம் என்னுடைய அனுபோக சுவாதீனத்தில் உள்ளது என்றால் சரிதான். அதில் ஒரு புளிய மரம் உள்ளத என்றால் சரிதான். அந்த புளியமரம் யாருக்கு பாத்தியப்பட்டது என்று எனக்கும் ஆஜர் எதிரிக்கும் பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரிதான்.அதன் காரணமாக ஆஜர் எதிரி அந்த புளியமரத்திற்கு வேலி போட்டார் என்றால் சரிதான். அவ்வாறு வேலி போட்ட போது நான் அவரிடம் கேட்க சென்றேன் என்றும், அப்போது அவர் விறகு வெட்டும் கத்தியால் என்னை தாக்க வந்தார் என்று சொன்னால் நான் தான் தவறி கீழே விழுந்து

விட்டேன்.அவ்வாறு ஆஜர் எதிரி தாக்க வந்த போது நான் கையால் தடுத்தேன் என்றும், அப்போது கத்தி எனது இடது காதின் மீது பட்டு காயம் ஏற்பட்டதாகவும் புகார் வாக்குமூலத்திலும் போலீஸ் விசாரணையிலும் கூறியுள்ளேன் என்றால் எனக்குநினைவில்லை. எனக்கு இடது காதின் மீது தான் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான்.இந்த சம்பவத்திற்கு பின்னிட்டு நானும் ஆஜர் எதிரியும் சமாதனம் ஆகிவிட்டோம் என்றால் சரிதான்.சமாதனம் ஆகிவிட்டதால் தான் ஆஜர் எதிரிக்கு ஆதரவாக நான் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரிதான்.ஆஜர் எதிரி எனக்கு உறவுக்காரர் என்பதாலும் எதிர்காலத்தில் எங்களுக்குள் சொந்தம் விட்டு போககூடாது என்பதற்காகவும் நான் அவருடன் சமாதனமாக சென்றுவிட்டேன் என்றால் சரிதான்.

எ.த.கு.வி:-

இல்லை

நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், திருப்பத்தூர் வேலூர் மாவட்டம்

<u>சி.சி.எண். 177/2020</u>

2021ம்ஆண்டு நவம்பர் திங்கள் 24ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.2 வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது

| | | | | |
|---|---|---|---|---|
| **பெயர்** | : | **கார்த்திக்** | **வயது** | : **22** |
| **த/பெ.** | : | **குப்புசாமி** | **தொழில்** | : **ஆட்டோ ஓட்டுனர்** |
| **ஊர்** | : | **ஏலகிரிமலை** | **சமயம்** | : |
| **வட்டம்** | : | **திருப்பத்தூர்** | **சாதி** | : |
| **மாவட்டம்** | : | **திருப்பத்தூர்** | | |

**முதல் விசாரணை:-**

நான் ஏலகிரிமலை பாடானூர் கிராமத்தில் வசிக்கிறேன்.ஆட்டோ ஓட்டுனராக வேலை செய்கிறேன். அ.சா.1ஐ தெரியும். எனது பக்கத்துவீட்டுக்காரர். ஆஜர் எதிரியை தெரியும். அவரும் எனது பக்கத்துவீட்டுக்காரர்.சுமார் 1 1/2 ஆண்டுகளுக்கு முன்பு அ.சா.1 காயம்பட்டு கீழே விழுந்து கிடந்தார். அவரை நான் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தேன். அவருக்கு எவ்வாறு காயம் பட்டது என்று தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை அரசு தரப்பில் விசாரிக்க அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கியதன் பேரில் அ.த.கு.வி:-)**

அ.சா.1னும் ஆஜர் எதிரியும் தற்போது சமாதனம் ஆகிவிட்டு நல்லமுறையில் இருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். அவர்கள் இருவரும் எனது பக்கத்துவீடு என்பதால் அவர்கள் சமாதனம் ஆன விபரம் தெரியும். கடந்த 13.03.2020ம்தேதி மாலை சுமார் 06.00 மணிக்கு ஆஜர் எதிரி சிவில் பிரச்சனை காரணமாக கத்தியால் அ.சா.1ன் காதின் மீது வெட்டினார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. மேற்படி விபரங்களை நான் போலீஸ் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. அ.சா.1னும் ஆஜர் எதிரியும் சமாதனம் ஆகிவிட்டதால் எதிரிக்கு ஆதரவாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரிதான்.

எ.த.கு.வி:-

இல்லை